விஜயாவின்

கல்யாணம் பண்ணிப்பார்

டைரக்ஷன்... ப்ரசாத் * தயாரிப்பு... நாகிரெட்டி-சக்ரபாணி

விஜயாவின்
கல்யாணம் பண்ணிப்பார்

அதிகாரம் செய்யும் ஆள் இல்லாத காரணத்தால் வயது வந்தும்கூட ராஜு, சுசீந்திரியைப் போன்ற இளைஞர்களுடன் சேர்ந்துகொண்டு நாடகங்கள் அது இது என்று ஆடிக் கொண்டிருந்தானே ஒழிய வீட்டு விவகாரங்களைக் கொஞ்சமாகிலும் கவனிக்கவே இல்லை. அதனால் சம்சாரப் பொறுப்பெல்லாம் கண்ணம்மாவின் மேல் விழுந்தது. எல்லா வேலைகளையும் பாவம் அவளே கவனித்துக்கொள்ள வேண்டும். மேலும், வயது வந்து கல்யாணமாக வேண்டிய பெண் அம்மணி இருந்தாள். ஆண் திக்கில்லாத கண்ணம்மா பெண்ணுக்குக் கல்யாணம் செய்வதென்பது பேச்சா? வீட்டைக் கவனித்துக் கொள்ளும்படி ராஜுவையும், ராஜுவிற்கு உதவி செய்யாமல் இருக்கும்படி அம்மணியையும் கட்டு திட்டம் செய்ய முடியாத கண்ணம்மா பெண்ணுக்கு கல்யாணத்தை எப்படிச் செய்வாள்?

தன் காரியம் நிறைவேறுவதற்காக எதையும் செய்யக்கூடிய நீசன், பிரைவேட் கோவிந்தய்யா எல்லாவற்றையும் தீர்த்து வைப்பதைப்போல் நடித்துவந்தானே ஒழிய, அவன் ஆசையெல்லாம் தன் பெண் சிட்டியை எப்படியும் ராஜுவிற்கு முடிபோட்டு விடவேண்டுமென்பதுதான். முதலில் தன்னுடைய பெண்ணுக்குக் கல்யாணமாகிவிட்டால் பிறகு அம்மணிக்குச் சம்பந்தம் பார்த்து வைப்பார் என்ற எண்ணத்துடன் கண்ணம்மா ராஜுவை நன்றாக அலங்கரித்து கோவிந்தய்யா வீட்டிற்கு அனுப்பி வைத்தாள்.

ஆனால் சிட்டிக்குத் தாய் மாமன் பீமண்ணா என்பவன் இருந்தான். அவன் உடலில் உயிரிருக்கும் வரை சிட்டியை மற்றொருவர் மணம் செய்துகொள்வதற்கு ஒப்புக் கொள்ளமாட்டான். சிட்டிக்கும் எப்பொழுதும் அவன் நினைவுதான். ராஜுவும் அவன் சிஷ்யன் சுசீந்திரியும் பீமண்ணாவிற்குப் பயந்து கோவிந்தய்யா வீட்டிலிருந்து புழைக் கடைப் பக்கமாகப் புறப்பட்டு வீட்டை அடைந்தார்கள்.

அம்மணிக்குக் கல்யாணம் தான் முயன்றால் ஒழிய நடக்காது என்று ராஜு, சுசீந்திரியுடன் வரனுக்காகப் புறப்பட்டான். அநேக கிராமங்கள் சுற்றி, கடைசியில் ஒரு கிராமத்தை அடைந்து அங்கே அன்னவிடுதி பாட்டியின் மூலம் ஒரு சம்பந்தம் இருப்பதாகத் தெரிந்துகொண்டு அவர்கள் வீட்டைத் தேடிக்கொண்டு புறப்பட்டான்.

அந்த ஊரில் தணிகாஜலம் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் எக்ஸ் (Ex) ஜில்லா போர்டு மெம்பர், பஞ்சாயத்து போர்டு பிரசிடெண்ட். தன்னுடைய ஆஸ்தியையெல்லாம் அதிதிகளை ஆதரிப்பதில் தாரை வார்த்தார். ஆனால் அவரின் ஆடம்பரம் பழைய பழக்கத்தில் கொஞ்சமாகிலும் குறையவே இல்லை. ராஜு; சுசீந்திரி இந்த

விலை அணா இரண்டு

காப்பி ரைட்

தணிகாஜலத்தின் வேலைக்காரன் மாணிக்கத்தினிடம் சிக்கிக் கொண்டார்கள். மாணிக்கம் அவர்களை நேராக எஜமானன் தணிகாஜலம் வீட்டிற்கு அழைத்துக் கொண்டு போனான். சிலந்திக் கூண்டில் சிக்கியதைப் போலாகியது அவர்களுக்கு

தணிகாஜலம் அவர்களிருவருக்கும் சாப்பாடும் படுக்கையையும் ஏற்பாடு செய்தார். அம்மணிக்குச் சம்பந்தங்களைத் தானே விசாரித்தார். தட்சணை அதிகமானாலும் பாண்டு எழுதிக் கொடுத்து அளகாபுரத்தில் இருக்கும் வேலாயுதத்தின் மகன் ரமணி பி.ஏ.பி எல். க்கும், அம்மணிக்கும் சம்பந்த மேற்பாடு செய்யவேண்டுமென்று நிச்சயித்தார். ஆனால் பேச்சுவாக்கில் ராஜூவிற்குக் கல்யாணமாகவில்லை என்று தெரிந்து கொண்டு தணிகாஜலம் தன் பெண் சாவித்திரியை ராஜூவிற்குக் கொடுத்து கல்யாணம் செய்வதற்குக் காலையிலேயே புரோகிதனை அழைத்து முகூர்த்தம் வைக்க நிச்சயித்துக்கொண்டார். அன்றிரவு ராஜூவும் சுசீந்திரியும் அங்கிருந்து வெளியேற முயன்றார்கள். ஆனால் முடியவில்லை. மீண்டும் விடிகாலையில் அதே முயற்சியில் இருக்கும் பொழுது தணிகாஜலத்தின் பெண் சாவித்திரி அவர்களைப் பார்த்து, குறுக்கிடாமல் போய்விடும்படிச் சொன்னாள். தன் தகப்பனார் பொய் பேசினாரென்றும், அவரிடம் தம்படிக்கூட இல்லை யென்றும், வீடுகூட அநேகமாக அடைமானத்தின் கீழ் இருப்பதாகவும் தெரிவித்தாள். இவ்வார்த்தைகளைச் சொன்ன சாவித்திரியைப் பார்த்ததும் ராஜூவின் உள்ளம் கரைந்து போய் அவளையே கல்யாணம் செய்துகொள்ள எண்ணினான்.

ராஜூவிற்கும் சாவித்திரிக்கும் வைபவத்துடன் கல்யாணம் நடந்தது. தணிகாஜலம் தன் வார்த்தையைக் காப்பாற்றிக்கொள்ள வேலாயுதத்தினிடம் சென்று "பதினைந்தாயிரம் வரதட்சணைக் கொடுப்பதாகச் சொல்லி அம்மணிக்கும் ரமணிக்கும் கல்யாணம் நிச்சயித்தார்.

தன் சூழ்ச்சி பலிக்காததற்குப் பிரைவேட் கோவிந்தய்யா விரோதம் பாராட்டி இந்தக் கல்யாணத்தை நிறுத்தி, அந்தச் சம்பந்தத்திற்குத் தன் பெண் சிட்டியை முடிபோட நிச்சயித்தான்.

கலியாண வாசல் கோலாகலமாக இருந்தது. புரோகிதர்கள் மந்திரம் ஜபித்துக் கொண்டிருந்தார்கள். மாங்கல்யதாரணம் நடக்க இருந்தது. இந்தச் சமயம் பார்த்து கோவிந்தய்யா வேலாயுதத்தினிடம் சென்று அவருக்குத் தட்சணைக் கிடைக்காது என்று காதில் கடித்தான். வேலாயுதம் கலவரத்துடன் தணிகாஜலத்தினிடம் சென்று காணிக்கைப் பணத்தைக் காட்டச் சொன்னார். தணிகாஜலம் ஜோபியிலிருந்த பாண்டுப் பத்திரத்தை வெளிக்கு எடுத்தார். வேலாயுதம் ஆத்திரத்துடன் பற்களை நறநற வென்று கடித்தார். மூன்று முடிகள் விழுந்துவிட்ட போதிலும் அவர் தன்னுடைய மகனைக் கல்யாண மணைமீதிருந்து பலவந்தமாக இழுத்துக்கொண்டு போனார்.

அம்மணியின் மணம் அலங்கோலமாகியது. கல்யாணத்திற்கு வந்தவர்கள் நழுவிக் கொண்டார்கள். கோவிந்தய்யா சந்தோஷத்துடன் வீட்டிற்குப் போய் ருக்குவிற்கு நற் செய்தியைத் தெரிவித்தான். கோவிந்தய்யாவின் வேலை பாதி முடிந்ததைப் போல்தான்!

கண்ணம்மாவின் வீடு அல்லோலகல்லோலத்தில் ஆழ்ந்தது. யாரும் கவலைப்பட வேண்டாமென்றும், சீக்கிரத்திலேயே வேலாயுதத்திற்குப் பணத்தைச் சரி செய்து அம்மணியின் வாழ்க்கையைச் செழிப்புறச் செய்கிறேன் என்றும் மகள் சாவித்திரியிடம் சொல்லிவிட்டு தணிகாஜலமும் நழுவிக் கொண்டார். ஆனால் கண்ணம்மாவின் குடும்பத்திற்கு உண்டான அவமானம் அவ்வளவு சீக்கிரத்தில் போய்விடுவதா என்ன? யாரும் இல்லாத சமயத்தில் அம்மணி தற்கொலை செய்துகொள்ளப் போகும் பொழுது, சாவித்திரி கூக்குரலிட்டு இந்த ஆபத்தைத் தவிர்க்கச் செய்தாள்.

மீண்டும் அம்மணியின் பொறுப்பு ராஜுவின் மேல் விழுந்தது. ராஜு எல்லோர் உடலிலுள்ள நகைகளை வாங்கிக்கொண்டு, வெள்ளியும் பொன்னுமாகச் சேர்த்து மூட்டை கட்டிக்கொண்டு, சில்லரைப் பணத்திலிருந்து திரட்டிக் கொண்டுபோய் வேலாயுதத்தின் கால்களில் விழுந்து, "எங்களுக்குள்ள ஆஸ்தியெல்லாம் இதுதான். இதை' பெற்றுக்கொண்டு அம்மணியை அழைத்துக் கொள்ளுங்கள்" என்று மன்றாடினான். ஆனால் வேலாயுதம் செவி சாய்க்கவில்லை. பையனுக்கு அதற்குள்ளாகவே மற்றொரு சம்பந்தம்—"இதன் தாத்தாவைப் போன்ற சம்பந்தம்"—தேடி செய்யும் யோசனையில் இருந்தார். ராஜு தன்னுடைய மாமா ரமணியின் கால்களைப் பிடித்துக்கொண்டு "மாமா, என் குடும்பத்தைக் காப்பாற்று...நீ கருணை காட்டாவிட்டால் என் தங்கை பிழைக்க மாட்டாள்...அவள் உயிரை எப்படியாகிலும் காப்பாற்று!" என்று அழுதான்.

ரமணியின் உள்ளம் உருகியது. ஆனால் அப்பாவின் எதிரில் ரொம்பவும் கடினமாக இருந்தான். சென்னைக்குப் போகிறேன் என்று அப்பாவிடம் பொய் சொல்லிவிட்டு நேராக மாமியார் வீட்டிற்கு வந்துவிட்டான். அம்மணியின் வாழ்க்கை நரகத்திலிருந்து மீண்ட சுவர்க்க வாழ்க்கையாக மாறியது. தன்னுடைய ரகசியம் இந்தக் கிராமத்தில் வெளிப்பட்டுவிடும் என்று எண்ணி ரமணி மனைவியுடன் சென்னையை அடைந்தான்.

அம்மணி யாருடனே ஓடிவிட்டாளென்று ஊரில் புகார் எழும்பியது. இந்த வார்த்தை கோவிந்தய்யாவுக்குக் கர்ணாமிருதமாக இருந்தது. அதுவரையெல்லாம் கண்ணம்மாவை ஜீவனாம்ச வழக்குத் தொடரச் சொல்லி நச்சரித்துக்கொண்டே வந்தான். லாபமில்லாமல் போய்விட்டது. கோவிந்தய்யா வேலாயுதத்தினிடம் சென்று, "உன் மருமகள் ஓடிவிட்டாள். கண்ணம்மா ஜீவனாம்ச வழக்குத் தொடரப் போகிறாள். எங்கள் பெண்ணை வாங்கிக்கொள்ளுங்கள்" என்று யோசனை சொன்னான். ஆனால் வேலாயுதம் செவி சாய்க்காமல் கோவிந்தய்யாவிற்குச் சாப்பாடுகூட போடாமல

அனுப்பிவிட்டார். கோவிந்தய்யா தணிகாஜலத்தினிடம் வந்து ஜீவனாம்ச வழக்குத் தொடரச் சொல்லி, அங்கிருந்தும் விரட்டப்பட்டான்.

கோவிந்தய்யா சம்பந்தமென்றால் கோபம் கொண்டாரே ஒழிய, வேலாயுதம் தன்னுடைய மகனுக்கு இரண்டாவது கல்யாணம் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தை மட்டும் விடவில்லை. அவர் இந்த தன்னுடைய அபிப்பிராயததை மகனுக்குத் தெரிவித்து, கலந்து பேச பட்டினம் வருவதாகக் கடிதம் எழுதினார். இந்தக் கடிதத்தைப் பார்த்து ரமணியும் அம்மணியும், அந்தச் சமயத்தில் அங்கிருந்த ராஜுவும் அதிர்ச்சி அடைந்தார்கள். எல்லோருமாக யோசித்து, வேலாயுதத்தை வஞ்சித்து நாடகமாட நிச்சயித்தார்கள். இந்த நாடகத்தில் ரமணி பைத்தியக்காரன், ராஜு டாக்டர், அம்மணி நர்ஸ்.

நல்லபடியாக இருந்த மகனுக்குப் பெண்டாட்டிப் பைத்தியம் பிடித்ததைப் பார்த்து வேலாயுதம் மனமுடைந்தார். வைத்தியரின் யோசனையின் பேரில் "நர்ஸை"யும் ரமணியையும் தன் சொந்த கிராமத்திற்குச் சேர்ப்பித்தார். மருமகளாக மாமனாரின் மனத்தைக் கரைக்க முடியாமல் போனாலும் அம்மணி நர்ஸாகத் தத்துவங்களைப் பாடி, மாமனாரின் புராணத்தைக் கேட்டு வெகு சுலபமாகக் கரைத்து விட்டாள்.

வேலாயுதத்தின் கண்களில் காரத்தைத் தூவி ரமணியும் அம்மணியும் உல்லாசமாகக் காலத்தைக் கழித்துக்கொண்டு வரும் பொழுது, அம்மணி கர்ப்பம் தரித்த அடையாளங்கள் காணப்பட்டன. தன் நோய் சுமாராகி விட்டது என்ற சாக்கில் ரமணி சென்னைக்குப் புறப்பட்டான்.

அம்மணி பிறந்தகம் வந்து விட்டாள் காலக் கிரமத்தில் ஆண்மகனைப் பெற்றாள். குழந்தையைத் தொட்டிலிட்ட பொழுது ஊரார் ஒருவிதமாகப் பேசிக் கொண்டார்கள். அம்மணி யாருடனோ ஓடிப்போய், கர்ப்பவதியாகி மீண்டும் வந்து குழந்தையைப் பெற்றாள் - இவ்வளவுதான் ஊரார் அறிவார்கள். கோவிந்தய்யா மட்டும் துப்பு ஏதாகிலும் கிடைக்குமா என்று

வந்தான். கண்ணம்மா ஒளிமறைவின்றி நடந்ததை ஒன்று விடாமல் கோவிந்தய்யாவிற்குச் சொன்னாள்.

இதுதான் கோவிந்தய்யாவிற்கும் வேண்டியது!

அவன் அவசரமாக வேலாயுதத்தினிடம் சென்றான். இந்தத் தடவை கண்ணம்மா ஆஸ்திக்கே தாவா போடப் போகிறாள் என்றும், உடனே தன்னுடைய பெண்ணை முடிபோடுவதைத் தவிர வேறு வழியில்லை என்றும் வேலாயுதத்தை நம்பவைத்து விவாகத்திற்கு முகூர்த்தம் வைத்துக் கொண்டு வீட்டிற்கு வந்தான்.

கோவிந்தய்யா தன்னுடைய சாமர்த்தியத்தை மனைவிக்கும் மகளுக்கும் தெரிவித்ததும் சிட்டி கலக்கமடைந்து, அன்றிரவே பீமண்ணாவிடம் சென்று சரணடைந்தாள். சமயத்திற்கு தணிகாஜலம் அந்த ஊருக்கு வந்திருந்தார். அவர் இவ்விருவருக்கும் தமிழ் மந்திரத்தால் விவாகம் செய்து, பீமண்ணாவைக்கொண்டு சிட்டியின் கழுத்தில் மஞ்சளைக் கட்டச் செய்தார். ஆனால் கோவிந்தய்யாவும் ருக்குவும் போலி போலீஸாரை உடன் அழைத்துக்கொண்டு பீமண்ணா வீட்டிற்கு வந்து, மகளை அழைத்துக்கொண்டு, புறப்பட்டு வேலாயுதத்தின் ஊரை அடைந்தார்கள்.

ரமணிக்கு சிட்டியைக் கொடுத்து கல்யாணம் செய்யப்போகிறார்கள் என்ற விஷயம் தெரிந்ததும் தணிகாஜலம் பட்டினத்திற்குப் புறப்பட்டார். தன்னுடைய சிட்டியை "யார் கல்யாணம் பண்ணிக்கிறானோ பார்க்கிறேன்" என்றார், அவன் "ரத்தத்தை ருசி:பார்க்கிறேன்" என்றும் பீமண்ணாவும் புறப்பட்டான்.

கோவிந்தய்யா மனைவி மகளுடன் சேரும் பொழுது வேலாயுதத்தின் கையில் தந்தி இருநதது. ரமணிக்குப் பைத்தியம் மீண்டும் முற்றியதாகத் தகவல் வேலாயுதம் கவலைப்பட்டார். ஆனால் கோவிந்தய்யா, "இதெல்லாம் வெறும் மோசம்." என்றான். உண்மையைத் தெரிந்து கொள்வதற்கு வேலாயுதம், கோவிந்தய்யா, ருக்கு, சிட்டி சென்னைக்குப் புறப்பட்டார்கள்.

அவர்கள் வரும்பொழுது ரமணிக்குக் காரிய பைத்தியம் உச்ச நிலையில இருந்தது. டாக்டர் வேஷத்திலிருந்த ராஜுவும் நர்ஸ் வேஷத்தில் அம்மணியும் ஆர்பாட்டம் செய்து கொண்டிருந்தார்கள். வேலாயுதம் கால்கள் சில்லிட்டன. ஆனால் கோவிந்தய்யா ஊடுருவிக் கவனித்துக் கொண்டே இருந்தான். ஆனால் அவனுக்கு ஒன்றும் துப்பு கிடைக்கவலலை.

இதற்குள் துர் அதிர்ஷ்டவசமாகபக்கத்து அறையில் இருந்த குழந்தைக் தேவி அழுதது. கோவிந்தய்யா உள்ளே போய் கண்ணம்மாவின் பேரனை அடையாளம் கண்டு கொண்டான். நர்ஸ் அம்மணி என்றும், வைத்தியர் ராஜு என்றும் தெரிந்து கொண்டான்.

யாரிடமும் மோசம் போகாத தன்னை மோசம் செய்ததற்கு வேலாயுதம் எரிந்து விழுந்தார். ரமணி தனக்கு அம்மணியே வேண்டுமென்றும் செலவுக்குப் பணம் கொடுக்காமல் போனால் எந்த உத்திபோகமாவது செய்து மனைவியையும் மகனையும் காப்பாற்றிக் கொள்கிறேனென்றும் உடனே அந்த வீட்டிலிருந்து போய் விடுவதாகவும சொன்னான். வேலாயுதம் அவஸ்தைப்பட்டார். சிட்டியை ரமணிக்குக் கொடுத்து எப்படிச் செய்வது என்று அவருக்கொன்றும் புலப்படவில்லை

வேலாயுதத்தின் புதிரை அவன் தீர்க்க முயன்றான். யானை இறந்தாலும் இருந்தாலும் ஆயிரம் பொன். "என் பெண்ணை நீயே செய்துகொள்" என்றான் வேலாயுதத்திடம், கோவிந்தய்யா. ஆனால் ருக்கு "என் பெண்ணை அந்தக் கிழவனுக்குக் கொடுக்கவே மாட்டேன்" என்றாள்.

இதற்குள் பீமன்னாவும் தனிகாஜலமும் வந்தார்கள். "மாமா" என்று சிட்டி தன்னுடைய கணவனை அணைத்துக் கொண்டாள். சிட்டிக்கு இதறகு முன்பே கல்யாணம் ஆகிவிட்டதென்று தனிகாஜலம் சொல்லவே, வேலாயுதம் கோவிந்தய்யாவைப் போலீஸுக்குப் பிடித்துக்கொடுக்க நினைத்தார் கோவிந்தய்யா மன்னிப்பை வேண்டி வெளியே நடந்தான்.

தன்னுடைய மகனும் மருமகளும பேரனை எடுத்துக் கொண்டு பிரயாணமாகிக் கொண்டிருப்பது வேலாயுதத்திற்குச் சொல்லிமுடியா வருத்தத்தைத் தந்தது. தனிகாஜலம் வேலாயுதத்திற்கு உதவி செய்யப் போனார். ஆனால் அப்பாவுடன் ஒத்துப் பேவதற்கு ரமணி ஒப்புக் கொள்ளவில்லை.

இதற்குள் வேலாயுதமே யோசித்து ஒரு முடிவிற்கு வந்தார். இருந்தாற்போலிருந்து அவர் வேண்டுமென்றே இறந்தவரைப் போல் விழுந்துவிட்டார். ரமணியும் அம்மணியும் கதறினார்கள். குழந்தையைக் கொடுக்காமல் போனதற்கு பெரிதும வருந்தினார்கள். அப்பொழுது, "சொன்ன பேச்சை தவறக்கூடாது" என்று கிழவர் எழுந்து உட்கார்ந்து கொண்டார். அந்த ஆனந்தத்தில் எல்லா குறைகளும் அடித்துக்கொண்டு போயின.

ப்ரம்மாவே - ஏ-ப்ரம்மாவே
மானிலத்தை மயக்கவல்ல -
    ரம்பைபோல பொம்பளே
மாலை சூட்டி வைக்காவிடில்-
    இனியும் வாழமுடியாது (ப்ரம்)

ப்ரம்மா :

ஜாடிக்கேற்ற மூடிபோலே-
    தேடி எடுத்த ஜோடிதான்
கோடிபேச்சு பேசினாலும-
    குறுக்கே மீறி பேசாது

அநுமந்தா :

ஹ......ஹா.........
உண்மையான தெய்வம் நீயே-
    என்பனபோல் செய்தாயே
தன்யனானேன் புண்யவானே-
    உன்னை என்றும் மறவேனே
ப்ரம்மாவே-ஏ-ப்ரம்மாவே
ஏய்-யூதோ - யாரு-உன்னைதான்-நான்தான்
உன் புருஷன்தான்- அடே பேசலையே.
ஒரு வார்த்தையும் பேசலையே-
    ஊமைப் பெண்ணை ஈன்றுயா
அருள்வாய் அவள் வாய் திறக்க-
    அடியாரிடம் பரிஹாஸமா (ப்ரம்)

ப்ரம்மா :

நன்றி தெரிந்து மூடியதால்-
    நாவை திறக்கச் சொல்லாதே
நாக்கு துடித்த பெண்களோடு-
    நரரும வாழ முடியாது.

அநுமந்தா :

வாழ்வில்லேன்னு உனக்கென்ன-
    வாயை திறந்து போமையா

ப்ரம்மா :

ஆனால் இது உன் கர்மம்-
    அனுபவிடா அநுமந்தா
அநுமந்தா ஏ-அநுமந்தா.

அநுமந்தா :

காதலி-என் காதலி-இன்னும் கிருக்கியோ.

பெண் :

கிருக்கியோ மலுவோ-வாயை மூடிகிட்டு
வாங்கியே வரணும்
வாயல் சில்கு-செண்டு பவுடர்
பீச்சுக்கு போக ப்யூது காரு.
கோல்டு வாச்சு-முகமல் சில்பர்
கொஞ்சி குலாவிட குச்சி நாயி.

அநுமந்தா:

அம்மாடி... ஆ......

பெண் :

ஆ.........
கோல்டு வாச்சு முகமல் சில்பர்
கொஞ்சி குலாவிட குச்சி நாயி
வாயை மூடிகிட்டு வேண்டியதெல்லாம்
வாங்கியே வரணும்-வழியில்லேன்னு-டுடுடு

அநுமந்தா :

காளிபோல வாயாடியை
கழுத்தில் கட்டினதேனையா
பாழும் கூச்சல் தாங்கலையே
பாவி வாயை மூடுமையா

பெண் :

என் வாய்தனை மூடச்சொல்ல
எவன் வந்தாலும் முடியாது
மண் மீதினில் ப்ரம்மன் செய்யும்
மஹிமை என்ன பார்ப்போமே.

ப்ரம்மா :

ஆமாம்மா அதுவும் சரிதாம்மா
என்னாலினி முடியாதது
பெண்கள் வாயை மூடுவது
உன்னோடினி வாதம் ஏனோ
உத்தரவு வேணுமம்மா.

அநுமந்தா :

இதுதானா உன் மூளை-
    இப்படி நீ எழுதலாமா
ப்ரம்மாவே - ஏ - ப்ரம்மாவே

2. பீமண்ணா & சிட்டி

பீமண்ணா :

எவன் வந்தாலும் விடமாட்டேன்-சவால்
யார் வந்தாலும் விடமாட்டேன் (எவன்)

சிட்டியம்மா நீ என் பெண்ஜாதி
நீயும்-பிறந்ததே எனக்காக
மீசை-வளர்ந்ததே உனக்காக
பல்டி-அடிச்சதே பணம்
செய்வதற்காக (எவன்)

சிட்டி :

ஐயோ மச்சான் பயமா இருக்கே
அம்மா அப்பா அழைச்சிவராங்க
அழகா மாப்பிள்ளை கொண்டு வராங்க
ஆமாங்க என்ன செய்வீங்க பார்ப்போம்

பிமேண்ணு :

என்ன செய்வேனே-வரட்டும் சொல்றேன்
குஸ்தியும் போட்டு-குலுக்கி வீசுவேன்
ஆல சுவற்றுக்கு அந்தாண்டே எரிவேன்
அவ்வளவுதான்
பிமேண்ணுவுக்கு கோபம் வராது
வந்தாலுமது திரும்பி போகாது (எவன்)

3. ராஜு & சுசீந்திரி

கல்யாணம் செய்து காட்டிடுவோம்-நாம்
காரியத்தில் கொடி நாட்டிடுவோம் (கல்)
மைசூர் மலபார் ஹைதராபாத்
சாம்பார்பாத்
மதராஸ் கித்ரூஸ் வலே வீசிடுவோம்
சகபர்ஸ்
வரதக்ஷிணைதான் எது கேட்டாலுமே
வாங்கிகொள்வீர் என-
வாரி இறைத்தே (கல்)
கோட்டு பேண்டு வாச்சு செயின்ஸ்
ஆட்டுக் கொம்பு கிருப்பிங் கருல்சு
ரைட்டு ஆல்ரைட்டு
பஸ்டு கிளாஸா மாப்பிள்ளை பார்த்து
பலாத்காரமா அழைத்து வந்து (கல்)
பஜ்ஜி போண்டா இட்லி சட்னி
பாதாம் ஹல்வா-பர்பீ ஜாங்கிரி
ஆகாக...காகா......

ராஜு

தேக்ஸா நிறையா காப்பிபோட்டு
ஜமாஜமாவா விருந்துகள் செய்வோம் (கல்)
தங்க பல்லக்கிலே மாப்பிள்ளை பொண்ணும்
தாளமும் மேளமும் பிப்பிரி பிப்பிரிபீ
டாஞ்சூர் பேண்டு துத்துரு துத்துருதூ
டபார் டமாரம் டங்கா கொட்டி. (கல்)

4. மின்மினி & சுசீந்திரி

மின்மினி : எங்கே வந்தீர் எந்த ஊரோ-ராஜ
யௌவன புருஷர்கள் யாரோ.
சுசீந்திரி : ஆசானே டுசிஷ்யன் நானே சிவன்
வாழும் சிதம்பரம் தானே.
மின்மினி : தண்டங்க தண்டங்க சுவாமி-
தமிழ் பண்டித வித்வ ஆசாமி.
சுசீந்திரி : பல்லாண்டு பல்லாண்டு ஓங்கி-
வாழ நல்லாசியே வானராங்கி.
மின்மினி : வந்த விஷயம் என்ன நீங்க.
சுசீந்திரி : நாங்க கல்யாணமே செய்யதாங்க
மின்மினி : அப்போ அது வென்றால்
அழகா உட்காருங்க
சுசீந்திரி : சரி-ஆகட்டும கவலைப்படாதிங்க.

5. ஊர்வசி, அர்ஜுனன் & மன்மதன்

ஊர்வசி :

எங்கு சென்றுயோ-ஹாப்ரியா
எங்கு சென்றுயோ
ப்ரியா...ப்ரியா...ப்ரியா...ப்ரியா......
ஹாப்பிரியா
யுக யுகாந்தமாய் கடந்த ஞானிகளை
தபோ பங்கம் செய்த ஊர்வசிநான்
உன் காதலி நான் (எங்கு)

அர்ஜுனன் :

இங்கேதான்-நானிங்கே தான்
யுக யுகாந்தமாய் கடந்த ஞானிகளை
தபோ பங்கம் செய்த ஊர்வசியா
அனைவரின் காதலியா
போதுமபோதும் பொது உடமையான-உன்
காதல் தியாகத்திற்கு நமஸ்தே-
நமஸ்தே-நமஸ்தே.

மன்மதன் :

ஐயா இங்கேதான்-அம்மா அங்கேதான்
ரெண்டு பேர் பொருத்தம் எங்கேதான்-ஆக
ரெண்டு பேர் பொருத்தம் எங்கேதான்.

ஊர்வசி :

மனமகிழ்ந்திடும் வனிதையை
இகழ்ந்திடலாகுமா
நரனே-பாமரனே
இதோ ப்ருஹன்னளையாக-
சாபமே தருவேன்
ஐயனே அர்ஜுனனே

அர்ஜுனன் :

அரட்டுவதேனோ-மிரட்டுவதேனோ

மன்மதன் :

சமயம் வராதே-தவற விடாதே
இரவே சுகம் தரவே

ஊர்வசி :

ஆமா நிஜந்தான்-
என்னை விடலாமா (ப்ரியா)

6, சுசீந்திரி & மின்மினி

சுசீந்திரி :

எந்த ஊரு பெண்ணு நீ குட்டிராணி-பல்
ஏகமாக வெட்டுறியே சுட்டிராணி
டாப்பு டுப்பாக வந்துட்டியே டிங்குராணி
டுப்பு டாப்பாக வந்துட்டியே டிங்குராணி.

மின்மினி :

ஊரெல்லாம் என்னுதுதான்-
குட்டிராஜா சுவர்
பேரெல்லாம் நம்மதுதான்
சுட்டி ராஜா-நான்
சினிமா ஸ்டாருங்க பல்லு ராஜா-நான்
சினிமா ஸ்டாருங்க பல்லு ராஜா.

சுசீந்திரி:

பேஷான ஆளு நீ பொக்கைதாரா-சரி
வேஷமென்ன போட்டே-அடி
சக்கை ஸ்டாரா-நீ-
வேஷமென்ன போட்டே-அடி
சக்கை ஸ்டாரா-கர
கோஷமெல்லாம் செய்தாரா ஜோரு ஜோரா
பூமாலையெல்லாம் போட்டாரா ஊரு ஊரா.

மின்மினி :

ஈரோயின்னு போட்டேனே-
குள்ள ராஜா-ரஸிக
ரெல்லோரும் மெச்சினுங்க நொள்ள ராஜா-
எனக்கு
ஓ-ஹோண்ணு பேராச்சு ஊரு ஊரா
பூமாலையெலலாம் போட்டாங்க
ஜோரு ஜோரா.

7. ரமணி

தொகையரு

ஓ-வருங்கால பாரத வீரத் தலைவர்களே
யுவதி யுவமணிகளே-சுயானுபவத்தினாலே
நான்-சொல்லுவது பொன் மொழி இதே-
மண-மாலை சூட்டிக்கொண்டு
வீட்டைப் பார்த்துக்கொண்டு
வாழ்வினிலின்பம் அடைவீரே
யாவரும் சுகம் பெற நினைப்பீரே-தமிழ்
காவிய படகினில் செல்வீரே (மாலை)
வரதக்ஷிணையினாலே-நம் வாழ்க்கையை
பலி வாங்கவே-வழி பார்க்கும்
வைதீக பெரியார்க்கும்-அறிவு வரவே
நாட்டிலும், நகரிலும், தேச தேசங்களிலும்
நம் பேரை வாழ்த்திக்கொண்டே
ப்ரஜைகள் சுகம் பெறவே.
பொன்னும் ஒளிபோல்-பூவும் மணம்போல்
பூதலமேல் வாழ்வீர்
கண்ணும் இமைபோல் தம்பதிகள் தினம்
கர்ப்பச் செல்வங்களை கார்த்திடுவீர் (மாலை)
நவமானில மேல்-நவ மாமணிபோல்
நவஜீவனமே நடத்திடுவீர்
வண்ணம் பாடுங்கவி-எண்ணம் மீறவே
வானம்பாடிபோல் வாழ்ந்திடுவீர். (மாலை)
தமிழ் காவிய படகினில செல்வீரே.

8. ரமணி & அம்மணி

ரமணி : யாரோ யாரோ இந்த நவ நாடக
சூத்ரதாரிகள் (யாரோ)

அம்மணி : யாரா யாரா நேர்மையான
என் மாமனார்தனை
வஞ்சனை செய்தவர் யாரோ-
அவரே

ரமணி : பாதத்திலே பரிதாபமாகவே-
பலமுறை கெஞ்சினதாரோ
உன்னை விடமாட்டேன்-
நீதானே வாழ்வில்
துணையென பேசியதாரோ-
யாரோ அவரே

அம்மணி : ப்ரியசகி மேலுள்ள
ப்ரேமையினாலே-
பயமின்றி துணிந்தவர் யாரோ
ஞாயவாதி அன்யாயவாதியாய்
மாயமே செய்தவர் யாரோ-
யாரோ அவரே

ரமணி : மனதினிலே உதார குணமே
மலர்ந்ததின் காரணம் யாரோ

அம்மணி : வித்தையின் சாரம்-
சம்சாரம் செய்யவே
பத்திரம் செய்தவர் யாரோ-
யாரோ அவரே

ரமணி: அவர்தான் இவரே
அம்மணி: இவர்தான் அவரே
இருவரும்: அவர்தான் இவரே.

9. ரமணி

தொகையரு

ஜெகமே ஒரு சித்ர விசித்ர
நாடக அரங்கம்-ஆஜனமன்றோ
அதிலே பாத்ரதாரிகள்-பகவான்
அதற்கே சூத்ரதாரி அன்றோ.

எடுப்பு

இந்த ஜெகமெல்லாம் ஒரு நாடக மேடை
ஜெனமெல்லாம்-அதில் வேஷதாரிகள (ஜெ)

10. அம்மணி

மனமே எனை அறியாயோ-
மூட மனமே (மன)
வேஷமும் பாஷையும் வேதாந்தமெனும்
வெள்ளி இறைகளை தின்றாயே-என்
தங்கத் தூண்டியில் விழ்ந்தாயே- (மன)
ஸத்து சித்தெனும் பேதமே அறியா
சித்தேஸத்தென நினைந்தாயே-என்
எத்தில் மயங்கி வீழ்ந்தாயே (மன)
இயற்கையும் ஈசனும் ஒன்றே ஒன்றென
இருந்த ரஹஸ்யம் மறந்தாயே
ஸத்குரு போதனையே-இகழ்ந்தாயே (மன)

11. ரமணி

ஓ மனதில் ஆடும் மனமே
ஏனிந்த சுட்டித்தனமே
ஏனிந்த சுட்டித்தனமே-
மனதில் ஆடும் மனமே (ஏனி)
மேளம் வந்ததும் மணமாகுமா
மிதமிஞ்சிடும் அஹம்பாவமா
பாலு பொங்கி வரும் வேளையில்
பானையைதான் உடைக்கலாமா (ஏனி)
குட்டு வெளியில் ஆகும் வரையில்
குலுக்கும் மினுக்கும் குறும்புத்தனமும்
வெட்ட வெளிச்சமானலே
அதோகதி ஆகுமன்றோ (ஏனி)
அறிவின் பெருமை அறியாமல்-
பெரியவரிடம் பேசாதே
அசட்டுத்தனமாய் நடக்காதே
ஆணவமேன்- (வீண்) ஆணவமேன்
ஏமனமே. (ஏனி)

12. அம்மணி

ஏழுமலை ஆண்டவனே வெங்கடரமணா-
சப்தம் செய்யாதே நீ-
நித்திரை செய் சுவாமி. (ஏழு)
பாற் கடலின் அலைகளுமே-
மஞ்சமாய் விளங்க
பாராளும் சந்திரகலை மலரணையுமாக
கண்ணில் மின்னும் காதலலை-
பன்னீரை தூவ
காத்து வழி பார்த்திடும்
உன் அலமேலு மங்கை (ஏழு)
என் த்யான இதய ஒளி என்று
நம்பினேன் சுவாமி
என் வாழ்வின் இன்பமே
என்னை மறந்திடாதே
பிரகாச்சாரம்ப பதுங்கி நின்றுள் சுவாமி
யாரும் அறியாமல் இன்றே
அருகில் வருவேன் ஸ்வாமி (ஏழு)

13. பையன், பாட்டி & தாய்

பையன்:

அம்மா நோவுதே-அம்மம்மா நோவுதே
பஸ்டு கிளாஸிலே-பாஸு பண்ணவே
பகலும் ராவுமா-பாடம் படித்தால்
பரீக்ஷையன்றே பிடித்துக்கொண்டதே
பள்ளிக்கு எப்படி நான் போவேன் (அம்)

பாட்டி:

கண்ணே எழுந்திடு-மருந்து சாப்பிடு
பரீக்ஷைக்காக திகிலடையாதே
பாஸு பண்ணலாம் அடுத்த வருஷமே
நல்லா இருந்தா அதுவே போதும்
செல்வமாகவே வீட்டிலே இரு (கண்)

தாய்:

ஐயோ கேஸரி-ஐய்யய்யோ ஜாங்கிரி
பரீக்ஷைக்கேகும் பையனுக்காக
பாகு சீனியில் பதமா செய்தேன்
பாவம் பிள்ளைக்கே ப்ராப்தமில்லையே
பழாப்போன நோவும் வந்ததே. (ஐயோ)

பையன்:

அம்மா போனதே-அம்மம்மா போனதே
அம்மா ஒண்ணுதா-அம்மம்மா ஒண்ணுதா.

பாட்டி :

கண்ணே கேளுடா-
உன் வயிர்தான் வலிக்குண்டா.

பையன் :

அம்மா ஒண்ணுதா-அம்மம்மா ஒண்ணுதா

தாய் :

புத்தி வந்ததா-உனக்கு புத்தி வந்ததா

பையன் :

புத்தி வந்ததே-அம்மா புத்தி வந்ததே

தாய் :

படிக்கப் போரியா-நீ படிக்கப் போரியா

பையன் :

படிக்கப் போரேனே-
அம்மா படிக்கப் போரேனே

தாய் :

புத்தி வந்ததா

பையன் :

புத்தி வந்ததே அம்மா-
படிக்கப் போரேனே
நல்லா பாஸ் பண்ணுவேன்.

14. ஏழுமலே, அம்மணி & சாவித்திரி

ஏழுமலே :

அழுவாதே அழுவாதே அழகு ராஜாவே-
கண்ணே அழுது பால் கேக்காதே-
துரையே பாப்பாவே-சீமை ராஜாவே
ஈரேழுலகில் இவன் போல்-
எவனுமே பிறந்ததில்லையே
இமைகளே மூடமாட்டான்-என் ராஜா
பார்வையே ஓயமாட்டான்
தொல்லையே செய்யமாட்டான்
கிள்ளினு துள்ளமாட்டான்
புது உலக பிள்ளையல்ல-என் ராஜா
போக்கிரி பையனல்ல.

அம்மணி :

அத்தை மடிமேல் தாவியே-என் மகனே
ஆவலாய் போகாதேடா
நித்தமும் ஊரு சுற்றும்-உன் அத்தைக்கு
நேரம் ஏது சொல்லடா.

சாவித்திரி :

மகனேயே பெற்றதாலே-ஏமதனீ
மமதையே கொள்ளலாமா
மருமகள் வந்துவிட்டால்-உன் வாலே
மட்டமாய் வெட்டிவிடுவாள்.

அம்மணி :

மருமகள் உன்போலவே-வாயாடி
மனுஷியாய் வரவும் மாட்டாள்
பெருமையாய் பேசாமலே-
பெற்றுகொடு-பிடிவாதம் செய்யாமலே.
பிடிவாதமேன்-அண்ணி பிடிவாதமேன்.

15. பீமண்ணு

பயமென்னடி சிட்டி பயமென்னடி
பீமண்ணு நானிருக்க பயமென்னடி (பய)
தாலிகட்டின எந்தன் பெண்ஜாதி ஆனதும்
தந்தை என்ன அவுங்க தாத்தா
வந்தாலும் சரி (பய)
பஞ்சாயத்து போர்டு-
ப்ரெஸிடெண்டு ஏஞ்ஜைடு
ஐகோர்ட்டு போனலும் ஜட்ஜிமெண்டு
நம்மைடு (பய)
காத்திருந்தவன் பெண்ணை-
நேத்து வந்தவன்
பார்க்க ஆசைகாட்டினலும்-
உன்னை கைவிடுவேனே பெண்ணே (பய)

16. ....

வாழ்வேது-சுக வாழ்வேது
வஞ்சக உலகில் வாழ்வேது (வாழ்)
தேடி வந்த உன் யோக வாழ்விலே
கேடு வந்ததே விதிதானு
கோர பாபமும் கொடிய பாதகமும்
மாறிடாததுன் கெதிதானு (வாழ்)
தமிழன் நாட்டிலே பெண்களுக்குரிமை
தவறென சொல்வது சரிதானு
மாதர் பிறவியே மாபாப ஜென்மம்
வேதனே கேளா நிலேதானு (வாழ்)
வரதக்ஷிணையால் வாழ்வை சிதைத்திட
வழி செய்வது வீண் சதிதானு
முன்னேர் செய்த மூடபழக்கமே
மூண்டதெல்லாமே வினைதானு (வாழ்)

நடிகர்கள்

நடிகர்	பாத்திரம்
ஜி. வரலக்ஷிமி	அம்மணி
சாவித்திரி	சாவித்திரி
சூர்யகாந்தம்	ருக்கு
புஷ்பலதா	சிட்டி
டி. என். மீனாக்ஷி	கண்ணம்மா
பேபி கிரிஜா	மின்மினி
பேபி ராஜகுமாரி	டான்ஸ்
பத்மநாபம்	மாணிக்கம்
குடும்பராவ்	ஆறுமுகம்
என். டி. ராமாராவ்	ரமணி
எஸ். வி. ரங்காராவ்	தணிகாஜலம்
ஜோகாராவ்	ராஜு
துரைசாமி	கோவிந்தய்யா
சி. வி. வி. பந்துலு	வேலாயுதம்
மஹும் காளி வெங்கய்யா	பீமண்ணா
மாஸ்டர் குந்து	சுசீந்திரி
பாலகிருஷ்ணா	ஏழுமலை

டெக்னீஷியன்கள்

கதை	சக்ரபாணி
வசனம், பாட்டு	தஞ்சை ராமையாதாஸ்
அஸிஸ்டெண்ட்	V. V. S. மணி
சங்கீதம்	கண்டசாலா
போட்டோகிராபி	மார்கஸ் பார்ட்லி
ஒலிப்பதிவு	ஏ. கிருஷ்ணன்
ரிகார்டிங்	வி. சிவராம்
ப்ரொசசிங்	என். சி. சேன்குப்தா
ஆர்ட்	கோகலே, களாதர்
டேன்ஸ்	பசுமர்த்தி கிருஷ்ணமூர்த்தி
ஆர்க்கெஸ்ட்ரா	வேணு
எடிடிங்	சி. பி. ஜம்புலிங்கம், மணி
மேகப்	பிதாம்பரம்
ப்ரொடக்ஷன் எக்ஜிக்யூடிவ்ஸ்	ஜகந்நாத், சலபதிராவ்
டைரக்ஷன்	பிரஸாத்

ஸ்டுடியோ: **வாஹினி**

தயாரிப்பு: **நாகிரெட்டி & சக்ரபாணி**

தயாரிப்பாளர்கள்:

விஜயா ப்ரொடக்ஷன்ஸ் லிமிடெட், மதருஸ்.

PRINTED AT THE B. N. K. PRESS LTD. MADRAS - 24



விஜயாவின்

சந்திர ஹாரம்

டைரக்ஷன்.... K.காமேஸ்வரராவ், B.A.

தயாரிப்பு....நாகிரெட்டி..சக்ரபாணி